மாதர்மனோரஞ்சினி.

VOL. 1.	MADRAS: AUGUST 1899.	NO. 6.
புத்த. க.	சென்னப்பட்டணம்: 1899 ௵ ஆகஸ்டு ௴	இல. சு

மரகதவல்லி சுந்தரவல்லி சரித்திரம்.

(முன் தொடர்ச்சி).

மெய்ஞ்ஞானபுரத்திலுள்ள மாளிகையைப்பற்றிச் சொன்னோமே. அந்தமாளிகை இப்போது சுரங்கவழியாய்வந்து சேர்ந்த சிறிய பங்களா வைப்பார்க்கிலும் அமார் பத்தடி உயரமாகவே யிருந்தது. ஆகையினால் அந்த பெரு மாளிகையைச்சார்ந்த சிங்காரத் தோட்டத்திலிருந்து பார்த்தால் ஒன்றுமில்லை. அதன்றியும் மலையின் பின்புறத்திலிருந்ததினால் மலைமேலேறுபவர்க்கு மாத்திரம் புலப்படுமே யொழிய சாதாரணமாய்த் தரையிலிருந்து பார்ப்பவர்க்கொன்றும் தெரியாது. அந்தமலைப் பின்பக்கத்திலிருந்த மாளிகை யநேகருக்குத் தெரிந்திருந்தும் அவ்விடம் போவதற்கு சாத்தியமின்மையால் அதைநோக்கிப் போகிறவர்களொருவருமில்லை. மலையைச்சுற்றி யாற்றைக்கடந்து போகிறவர்கள் போகலாமேதவிர மற்றவர்கள் அவ்விடம் போகமுடியாது. இந்தக்காரணத்தினாலேயே மெய்ஞ்ஞானபுரத் தரசன்தான் தனியே விளையாடுவதற்காக அமைந்த அச்சிறு மாளிகைக்குப் போகவும் வரவும் சுரங்கமேற்படுத்திச் சொண்டான். இந்த சங்கதியை ஊரில் ஒருவருமறிந்தாரில்லை. அகஸ்மாத்தாக அம்மேடையினருகிற் சென்று பஞ்சணையின்மீது உட்கார்ந்தபடியினாலே **ஞானசிகாமணி**யும், **விவேகசிந்தாமணி**யும் தெரிந்துகொள்ள வேண்டியதாயிற்று. அரசனது ஆக்ஞையைமீறி இவ்விடம்வந்தும் சுகமில்லாமல் சிறையி லகப்பட்டுத்தம்விதியை நொந்து பரிதாபப்பட்டு எப்படி நாம் விடுப்பட்டுப்போ

வோம் என்று அகிலநாயகனைத் துதிசெய்து என்றைக்குக் கருணைசெய்வாரோ என்று எதிர்பார்த்திருந்தார்கள்.

முன்னமே நாம் சருடத்துவஜ மகாராஜாவுக்கு **புண்ணிமசீல** னென்றும், **புண்டரீகாக்ஷன்** என்றும், இரண்டு புத்திரர்களுண்டென்று சொன்னோமே. அவர்களுடன்கூடப் பிறந்து அருமையாய் வளர்க்கப்பட்ட சகோதரி யொருத்தியுண்டு; அம்மாதின்பெயர் **பத்மாசனி**— தகப்பனுருக்கு அதிக அன்புள்ள புத்திரி. தனக்கிஷ்டமானபோது தந்தையினுத்திரவின்படி தன் தோழிகளைக் கூட்டிக்கொண்டும், காவற்காரர்களாகிய சிபாய்களை துணையாகக்கொண்டும் மலைக்குப் பின்புறத்தில் அமைத்த சிறுமாளிகைக்குவந்து வசிக்கிறதுண்டு. அன்றையதினம் காலை தன்பிதாவின் அனுமதிபெற்று மெய்ஞ்ஞான புரத்தைவிட்டு மலையைச்சுற்றிவந்து அங்கோடும் பாகிரதியைக் கடக்கப்படகேறி வரும்போது தனக்குப் புருஷனுக நியமிக்கப்பட்ட உச்சினிதேசத்தரசன் மகனும் புண்ணியசிலமகாராஜன் சகோதரியின் புதல்வனுமான **சத்தியசந்த** னென்னு மிராஜபுத்திரன் வேட்டையாடித் தன்னிருப்பிடத்திற்குத் திரும்புகிற சமயத்தில் இவர்களைக் கண்ணுற்றுத் தானும் தனிப்படகேறி பின்தொடர்ந்துவந்தான். பத்மாசனியும்மாளிகையினிடம் வந்துசேர்ந்தாள். கொஞ்சநேரத்திற்குள் சத்தியசந்தனும் வந்து சேர்ந்தான். சந்தியசந்தனை எல்லாரும் அறிந்திருந்தபடியால் தடைசொல்லாமல் உள்ளே விட்டார்கள். அவ்விடத்திற்சென்று அங்கே படுத்திருந்த மாதை வர்ணித்திருந்ததைக் கெட்டோமே; இதற்குள் யாரோ அந்நியபுருஷர்கள் வந்தாரென்று சந்தேகப்பட்டு சிப்பாய்களைக்கொண்டு ஞானசிகாமணியையும் விவேகசிந்தாமணியையும் சிறையிலடைக்கச் சொன்னுளே; பின்பவர்கள் கதியென்னமாயிற்று அதை நாம் விசாரிக்கவேண்டும். சத்தியசந்தன் பாடிய சிங்கார பத்தியத்தைக் கேட்டோமே. அமமட்டும் போதாதென்று மருபடியு மவளைப்புகழத் தொடங்கினுன்.

சிங்காரபத்தியம்.

வாணியோ வுசித யிந்திராணியோ தெரியாது
வவியவந் தெனையாளவந்த வடிவம்
அன்னமோ புடமிட்ட சொன்னமோ தெரியாது
அடியன் முன்னிறை காட்சிதந்தவடிவம்,

இவ்வாறு தன்னைப் புகழ்ந்ததைக்கேட்ட பத்மாசனியானவள் தன் சோபாவினின்று எழுந்திருந்து தன் நாயகனை இருக்கும்படிவேண்ட அவ்விராஜபுத்திரனும் நான் வேட்டையாடி இளைப்புடன் திரும்புகையில் நீ வருவதையறிந் துன்னைக்கண்டு சிலவார்த்தையாடித் திரும்பலாமென்றெண்ணி யிவ்விடம் வந்தேன். இரண்டு வீரர்கள் யாரோ தெரியவில்லை; அதைவிசா

ரித்துத் தெரிந்துகொள்ளலாம் வாவென் றழைத்துக்கொண்டு மேன்மாடியிலிருக்கும் சிற்றறையின் திறவுகோலை யெடுத்துக்கொண்டிருவரும் சென்றார்கள்.

அங்கே சிறைபட்ட இருவரும் தங்கள்விதியை நொந்து துக்கித்து இதுவுமீசன்செயலல்லவா? எவ்வாறு நாம் விடுப்பட்டுச் செல்லுவோமென்றேங்கியிருந்தார்கள். சற்றுநேரத்திற்குள் சிப்பாய் ஒருவனும் தோழியுடன்வந்து போசனம் செய்யும்படி அன்னம், கறிபதார்த்தங்கள், திவ்யமான லட்டு, ஜிலேபி, அல்வா, பூரி, ஆறுவிதரசங்கள், உருசையான பாயசம் முதலியவைகளை முன்வைத்தார்கள். பசிமிகுந்திருந்தபடியால் தங்களுக்குப் படைத்த போசனத்தையுண்டு தாம்பூலந்தரித்து அங்கே சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் நடந்த சம்பாஷணையாவது:—

நாமிருவரும் கோரிவந்த காரியம் முடியாதென்பதாகத் தோற்றுகிறது. கஷ்டங்களோ அநந்தம்; நாம் செய்கிற வொவ்வொரு விஷயத்திலும் ஈசுவரனது கருணையன்றி வேறொன்றுமில்லை. நாம் பெருமாளிகையிற்றங்கினதையும், மேடையின்மே லுட்கார்ந்ததையும் அது இச்சிறுமாளிகையிற் கொண்டுவந்துவிட்டதையும், இங்கே வந்தவுடன் சிறைப்பட்டதையும், யோசித்தால் இன்னம் என்ன விபரீதங்கள் நேரிடுமோ தெரியாது. ஆயினு மிவ்விடத்தைவிட்டு நீங்கினவுடன் நாம் செய்ய யோசித்ததைச் செய்துமுடித்து உடனே நமதூர்க்குச் செல்லவேண்டியது அவசியமே. அங்கு நாம் சொல்லாமற்புறப்பட்டு வந்ததற்காக என்ன விபரீதங்கள் விளைகின்றனவோ என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண் டிருந்தார்கள். இதற்குள்ளாக சத்தியசந்தனும் பத்மாசனியும் அவ்விடம்வந்து சேர்ந்தார்கள். அவ்விருவர் இருந்தசோர்வையும் கண்ணீர்விட்டுக் கலங்குவதால் உண்டாகிய சிவந்த கண்களையுங்கண்டு ஐயமுற்று இங்கேஏதோ சூதிருக்கவேண்டும்; இவர்கள் பார்வைக்கு வீரர்களாகத் தோன்றினும் நிஜமாக வீரர்களாகார்கள் என்று பலவாறாகக் குசு குசு என்று பேசிக்கொண்டார்கள். இவர்களிருவரையும் ஒருநாளிவ்விடம்வைத்து மறுநாள்கூட்டி சிப்பாய்களைக்கொண்டு தூரத்தில் விட்டுவிடும்படியாய்ச் செய்யலாமென்று தீர்மானித்துக்கொண்டார்கள்.

பின்பு இருவரும் சற்றுநேரம் சம்பாஷித்துக்கொண்டு பிறகு அம்மாளிகையைவிட்டுக் கிளம்பவேண்டிய ஏற்பாடுகளைச்செய்ய வுத்திரவளித்தார்கள். சத்தியசந்தனும், ஞானசிகாமணி, விவேகசிந்தாமணி யிருவர்களும் அம்மாளிகையினிடத்தில் இரண்டு மூன்று தினங்கள் தங்கியிருக்க, தன் தோழிகளுடன் உல்லாசமாக விளையாடி பத்மாசனி காலங்கழிப்பாள். சத்தியசந்தன் தனக்கு புருஷனாக நியமிக்கப்பட்டிருந்தும் இன்னும் விவாகம் நிறைவேறாதிருந்ததால் அவனுடன் தங்கியிருப்பதற்கு சாத்தியமில்லாமற்

போயிற்று. மேலும் இரண்டு வீரர்கள் எப்படிவந்தார்களோ அதையும் கவனிக்கவில்லை. முதலில் அந்தரமார்க்கமாக வந்திருக்கவேண்டுமென்றே யோசித்தாள். பின்னர் அது சரியல்ல சிப்பாய்களுக்குத் தெரியாமல் நுழைந்திருக்கவேண்டுமென்று நினைத்தாள். இப்படி யொன்றும் தெரியாமையாலும் தங்களுக்குள் சந்தேகமுண்டானபடி யாலும் இனியொருநிமிஷமும் அம்மாளிகையிற்றங்கக்கூடாதென்று சிப்பாய்களை நிறுத்திவிட்டுத் தன் தோழிமாருடனும் சத்தியசந்தருடனும் புறப்பட்டாள்.

CHAPTER VI.

கொச்சகம் - இராகம் - புன்னாகவராளி.

மூவரிருப்பிடமோ முப்பத்து முக்கோடி
தேவரிருப்பிடமோ செய்தவத்தோர் வாழிடமோ
வாவிபொழி னந்தவன மிருப்பதென்ன சொல்வேன்
யாவரிருப்பிடமோ யாதுமறிகிலமே.

ஆ! ஆ! மும்மூர்த்திகள் வாழ்கின்ற இடமோ முப்பத்து முக்கோடி தேவர்கள் வாசஞ்செய்யப்பட்ட ஸ்தானமோ? அல்லது ரிஷீஸ்வரர்கள் தவஞ்செய்யப்பட்ட யிடமோ? வனதேவதை வசிக்கப்பட்ட யிடமோ? ரிஷியாசிரமம்போலுந் தோற்றுகின்றதே முழுதும் போய்ப்பார்ப்போம். ஆ! ஆ! இந்த மரங்களிருக்கின்ற அழகேயழகு இந்தத் தடாகமிருக்கின்ற உன்னதமே யுன்னதம். இந்தத் தடாகத்தில் செந்தாமரை மலர்கள் மலர்ந்திருக்கின்ற நேர்த்தியேநேர்த்தி. ஆ! ஆ! அசோகமரங்கள் தழைத்திருக்கின்ற அலங்காரமே யலங்காரம். ஆ! ஆ! இப்போதுதான் நிலந்தெளிந்து வருகின்றது. இந்தப் பெருத்த அசோகமரத்தில் பஞ்சவர்ணக்கிளிகள் கொஞ்சுகின்ற ஓசையே ஓசை. இதோ இரண்டு செடிநடுவில் ஏதோ ஒரு ஊஞ்சற்பலகையும் அதின்மீதொரு மகாரிஷி யுட்காந்திருப்பதுபோல் தோன்றுகிறதே, பக்கத்தில் மகாலட்சுமிபோல் பத்தினி பணிவிடை செய்வதைப்போல் காணுகிறதே போய் நமஸ்காரம் செய்வோம்.

புண்ணியசீல மகாராஜாவின் புத்திரிகளாகிய **மரகதவல்லி சுந்தரவல்லி** யிருவரையும் தேடுவதற்காக அனுப்பப்பட்ட **வேங்கோபராவ் வீமராவ்** ஆகிய இரண்டுபேர்களும் மூன்று வண்ணார்களைப்போல் வேடங்கொண்ட திருடர்களின் கால்களை வெட்டிப் பின்பு காளிகோயிலின் பிரகாரஞ்சுற்றிவரும்போது அங்கே யொருகிளை வழி தோன்ற அம்மார்க்கமாகவே சற்று தூரஞ்செல்லவே செடிகளடர்ந்து உன்னதமாகிய தடாகமும் அத்தடாகத்தி னருகே யொரு பர்னகசாலையும் அருகே யிரண்டு மரங்களின் மத்தியில் தொங்கவிட்டிருந்த ஊஞ்சலின்பேரில் நீண்ட தாடியும் நெற்றி

யில் விபூதியும் தலை கழுத்து கரங்களில் உருத்திராக்ஷத் தாவடமும் அசைய அமர்ந்த மகாரிஷி யொருவரையும் அவரருகே நின்று பணிவிடை செய்கின்ற மாதையும் கண்டார்கள். அந்த ஆசிரமத்தி னழகையும் தாங் கள் கண்ட காட்சியையும் ஒருவருக்கொருவர் மேற்சொன்னவாறு பேசிக் கொண்டார்கள்.

மகாரிஷியினிடம் சென்று சிரமீது கைகூப்பி அஷ்டாங்க நமஸ்காரம் செய்து உடனே எழுந்திருந்து ஓ தபோதனரே எம்மை ரக்ஷித்துக் காக்க வேண்டும் நாங்க ளிப்போது ஆரம்பித்த வேலை யனுகூலமாகும்படி யனுக் கிரகம் செய்யவேண்டும் உம்மைப் போலொத்த முனீஸ்வரர் திருவருளைக் கொண்டு அநேகர் பண்டு எத்தனையோ காரியங்களை யெல்லாம் நிறைவே ற்றினார்கள். பகீரதன் மகா பிரயத்தனஞ் செய்து தம் முன்னோர்களாகிய சாகரர்களை நற்கதி யடையும்படி செய்யவில்லையா? கலைக்கோட்டு மகாரிஷி யினால் நடந்த உபகாரம் உலகத்தாருக்கு பிரசித்தமாகத் தெரியாதோ? விசுவாமித்திர மகாரிஷியினால் திரிசங்கு சொர்க்கமடையவில்லையா? ஆகை யால் ஏழைகளின்மீது கடைக்கண் சாத்தி யருளவேண்டுமென்று பிரார்த் தித்தார்கள். அதற்கு மகா முனிவர் திருவாய் மலர்ந்து சொல்லுகின்றார்.

நீவிர் யாவர் எங்கேகுகின்றீர் *அவாசிக் கண்ணதாய நமதாசிரமத்தை நாடி வர இஞ்ஞாலத்தார் யாவரு மஞ்சா நிற்க நுமதுடம்பிற் சற்று மச்ச மின்றி எவ்வாறு வந்தீர். இற்றை ஞான்று நுமதுடம்பிலாவிதங்காது நீறுகச் சபிப்பேன். இவ்விடம்விட்டேகுவீரென்று கடுந்தமிழிற்கூற அவ் விருவரு மதிசயித்துப் பக்கத்தினில்நின்ற தேவியின் முகத்தைப்பார்க்க அவள் புன்முறுவலோடு தனக்குள்தானே சிரிப்பதைக்கண்டு இதில் ஏதோ விசித்திர மிருக்கவேண்டுமென்று நினைத்துக்கொண் டிருக்கும்போது அம் மகாரிஷியானவர் நாமின்னாரெனப் புலப்படவில்லையா! காளியுடனெதிர்த்து வரப்பிரசாதம்பெற்ற மல்லமகாரிஷி. இதையறிந்து ஒரு நிமிஷமுந் தாம தஞ்செய்யாது செல்லக்கடவீரென்று கோபத்துடன் ஆக்ஞாபித்தார். வெங் கோபராவ் இக்கவார்த்தையைக்கேட்டு அங்கே மூன்று திருடர்களைக்கண்டு அவர்கள் கால்களை வெட்டினேம் இவனுமோர் திருட்டு ரிஷியாகத்தா னிரு க்கவேண்டுமென்று யூகித்து ஊஞ்சலின்மேலமர்ந்த தபோதனரைக் கீழே பிடித்துத்தள்ளினான். இதற்குள் வீமராவும் அவனைப் பிடித்து அங்கேயி ருந்த பர்னகசாலையிற் றள்ளிக் கதவைப் பூட்டினார்கள்.

(இன்னம்வரும்)

பி. ஷண்முகசுந்தரம்பிள்ளை, பி. ஏ.

---

* அவாசிக்கண்ணதாய = தெற்கிலுள்ள.

சாவித்திரீ சரித்திரம்.

(முன்தொடர்ச்சி.)

பிறகு சத்தியவான் வெளியிலிருந்து வந்தவுடன், தன் ஆசிரமத்திலிருந்த அசுவபதி முதலானவர்களைக் கண்டு, அவர்களுக்குத் தக்கபடி மரியாதை செய்து, தன் மாதா பிதாக்களிடம் சென்று அவர்களுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்து அவர்களோடு பேசிக்கொண்டிருந்தான். அப்போது அசுவபதி மன்னன் தன் தாய் தந்தைகளிடத்தில் செய்துகொண்டிருந்த விண்ணப்பத்தைக் கேட்டறிந்துகொண்டு அந்த அசுவபதி யரசனை நோக்கி சொன்னதாவது:—“ஐயா நாடு நகர மிழந்து குருடர்களாகி விருத்தாப்பியத்தால் காட்டில் தவித்துக்கொண்டிருக்கிற தாய் தந்தைகளைக் காப்பதை நான் விருதமாகக்கொண்டிருக்கிறேன். இப்படிப்பட்ட எனக்குக் கால் விலங்கு பூட்டிவிட்டு வருத்தத் துணிவது உமக்கு நியாயமோ? பாலியம் நீங்கி மங்கைப் பருவத்தையுடைய இம்மாதை நான் மணஞ்செய்துகொண்டால், அவளுக்கு வேண்டிய உபசாரங்களை நான் செய்யவேண்டுவதில்லையா? அப்படி நான் அவளை உபசரிப்பதற்கு எனக்கு இது காலமா? உழவுக்கும் அக்கினி ஹோத்திரத்திற்கும் சரிப்படாது என்ற பழமொழி உங்களுக்குத் தெரியாதா? அவசரப்பட்டால் காரியம் சரிவராதே: “பறப்பான் பயிருழந்தான்,” என்ற வாக்கியத்துக் கிணங்கியதாய் முடியுமே. பாருங்கள் ஒரு பெண்ணை ஒருவனுக்கு கலியாணஞ் செய்துகொடுக்க நேர்ந்தால் தந்தையோ கல்வியுடையானைக் கருதுவான், தாயோ பாக்கிய முடையானைக் கருதுவாள், சுற்றத்தாரோ நல்ல குலமுடையானைக் கருதுவார்கள், மற்று முள்ளவர்களோ நல்ல சாப்பாட்டைக் கருதுவார்கள், பெண்ணோ கட்டழகனைக் கருதுவாள்; இவற்றில் ஒன்றுக்கும் பற்றாத என்னை விவாகத்துக்காக வரிப்பதே தகுதியன்றே; நான் தங்களுக்கு அதிகம் சொல்லவேண்டுவதில்லை. உலகத்தில் பிராம்மம், தைய்வம், ஆர்ஷம், பிராஜாபத்தியம், ஆஸுரம், காந்தர்வம், இராக்ஷஸம் பைசாசம் என்று எட்டுவித விவாகங்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்று தங்களுக்கு தெரிந்த விஷயந்தானே. அவ்விவாகங்களில் **பிராம்ம விவாகத்தின்** இலக்ஷணத்தை விசாரித்துப் பார்ப்போம், வஸ்திராபரணங்களால் பெண்ணை யலங்கரித்து வித்தை அநுஷ்டானம் இவைகளை யுடைய ஒரு பிள்ளையை யழைத்து அப்பெண்ணை பிதாதானாகவே கொடுத்தால் அது பிராம்ம விவாகமென்று தங்களுக்குத் தெரியாதா? **தைய்வ விவாகம்** யாதெனில் ஒரு யாகத்தில*ருத்துவிக்காயிருப்பவனுக்கு பெண்ணை அலங்கார கன்னிகாதானமாகக் கொடுப்பது தானே: **ஆர்ஷ விவாகமோ** வெனில் ஒரு பசுவையும், ஒரு எருதையும் அல்லது இரண்டு பசுக்களையும், இரண்டு எருதுகளையும் ஒரு தகப்பன் தானப்பொழுது செய்கிற தர்ம காரியத்தின் விருத்திக்காகவாவது அல்லது தன்

பெண்ணுக்கு ஸ்ரீ தனமாகக் கொடுப்பதற்காகவாவது ஒருவரனிடத்திலிரு ந்து கன்னியா சுல்கமென்று நினையாமல் பெற்றுக்கொண்டு தன் கன்னி கையை அந்தவரனுக்குக் கொடுப்பதல்லவா? ஒரு பிதாவானவன் பெண் ணையும், பிள்ளையையும் பார்த்து "நீங்க ளிருவரும் கூடியிருந்து தருமத்தை அநுஷ்டிக்கக்கடவீர்கள்" என்று சொல்லி தன் பெண்ணை சர்வாபரண பூஷிதையாய் தானஞ்செய்தால் அந்த விவாகத்தை பிராஜாபத்தியமென்று பெரியோர்கள் சொல்லி யிருக்கிறது தங்களுக்குத் தெரியாததல்ல; ஆசுர விவாகமோவெனில் கன்னிகைக்கும் அவளுடைய பிதா முதலிய ஞாதிகளு க்கும் தன் சக்தியுள்ளமட்டில் பொருளைக் கொடுத்து விதி நியமங்களைத் தவறி தன்னிச்சையின்படி கன்னிகையை ஒருவன் கொண்டுபோவது தானே? காந்தர்வ விவாகமென்றால் பெண்ணும் பிள்ளையும் மனமொத்து இச்சையினால் கலியாணம் செய்துகொள்வதல்லவா? இராக்ஷஸ விவாகத்தின் சுரூபமென்னவெனில், ஒருவன் தன்னைக் தடுக்கிற கன்னிகையின் பந்துக்களை யடித்தும், வெட்டியும் ஐயோவென்று கூச்சலிட்டு அழுகிற கன்னிகையை அவள் வீட்டிலிருந்து பலாத்காரஞ் செய்துகொண்டு போவதைக் காட்டி லும் வேறுண்டா? எட்டாவதான பைசாச விவாகமானது ஒரு கன்னிகை தூங்கும்பொழுதாவது அல்லது மதித்து அறிவில்லாம லிருக்கும்பொழுதா வது அவளை பாணிக்கிரஹணம் செய்துகொள்வதல்லவா? இந்த விவா கங்களில் முதல் சொல்லிய நாலு விதங்களும் பிராமணனுக்குத் தகு ந்தவைகளென்றும், ராக்ஷசமும், காந்தர்வமும் க்ஷத்திரியனுக்குத் தகுந்த வைகளென்றும், ஆசுரம் வைசியனுக்கும் சூத்திரனுக்கும் தக்கதென்றும் பைசாசம் யாருக்கும் தகாதென்றும் ஸ்மிருதிகள் முறையிடுவதுந் தங்களு க்குத் தெரியாதவையல்ல. இந்த எட்டுவித விவாகத்தில் நம் ஜாதிக்கு ஏற்பட்டிருக்கிற இரண்டுவித விவாகத்துக்குள் ராக்ஷச விவாக முறையை நான் அநுசரிப்பது அநுவசியம்தானே? ஏனெனில் கன்னிகையும் அவளு டைய பந்துக்களாகிய தாங்களும் தங்களுடைய சுற்றத்தாரும் என் கலியா ணத்துக்கு ஒருவித ஆக்ஷேபத்தையும் சொல்லாமலிருக்கிறீர்கள் அல் லவா? ஆகையால் நான் தங்கள் பெண்ணை கலியாணஞ் செய்துகொள்ள வேண்டுமானால் காந்தர்வ முறைப்படிதானே செய்துகொள்ளவேண்டும். ஆனால் அப்படி செய்துகொள்வதற்கு பெண்ணுக்கும் பிள்ளைக்கும் மனக் களிப்பிருக்கவேண்டுவதில்லையா? எனக்கோ மனத்துயரம் மேலாடி யிருக் கிறது. ஆகையால் எனக்கு துக்கம் நீங்கி மனது சந்தோஷப்படுங் காலத் திலல்லவா நான் கலியாண சுகத்தைத் தேடவேண்டும். இராஜ்ஜியத்தைப் பறி கொடுத்து காட்டி லபறதையாய் திரிந்துகொண்டிருக்கிற என்னை விவாகம் பண்ணிக்கொள்ளச்சொல்ல தங்களுக்கு எப்படி மனது துணிந் ததோ தா யானறிகிலேன். ஆனதால் தாங்கள் தயவுசெய்து தங்களிருப்பிடம்

போய்ச் சேருங்கள். நான் வருத்தத்தா லிவ்விதமறுத்தேனென்று -தாங்கள் கோபங்கொள்ளாதபடி தங்களைவணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.'' இவ்விதம் நியாயம்பேசி விவாகத்தை மறுத்ததைக்கேட்ட அசுவபதியும் துக்கக்கடலில் மூழ்கினவனாகிப் பிரமித்து நின்றான். பிறகு புத்திதெளிந்தவுடன் சத்தியவான் எடுத்துக்காட்டின ஸ்மிருதிகளிலிருக்கும் சிலவாக்கியங்களைக்கொண்டு கலியாணஞ் செய்துகொள்வது ஆவசியகமென்று போதிக்கத்தொடங்கினான்:—''அப்பா குழந்தாய்! எனக்குத்தெரிந்த ஸ்மிருதிகள் உனக்குந் தெரிந்திருக்குமல்லவா? நீ எடுத்துக்காட்டின புஸ்தகங்களில் ஒவ்வொரு மனிதனுக்கும் தேவர்கடன், இருஷிகடன், பிதுர்க்கடன், முதலிய கடன்கள் உண்டென்று உனக்குத் தெரியாதா? நீ கலியாணம் பண்ணிக்கொண்டு புத்திரனையடையாமற்போனால் உன்னுடையபிதுர்க்களுக்குக் கொடுக்கவேண்டிய கடன் உனக்கு எப்படிதீரும். நமக்கு பாக்கியம் வருவதும் போவதும் நம் செயலல்லவே! ஆகையால் பாக்கியம்வந்து மனத்துயரம் நீங்கும்வரையில் தர்மகாரியத்தைச் செய்யாமலிருப்பது நியாயமாகத்தோற்றவில்லையே? அகவிலையையும் ஆயுசையும் கண்டவன்யார்? என்று ஜனங்கள் தினந்தோறும் சொல்லிக்கொண்டிருப்பது உன்காதில் விழுந்ததில்லைப்பா? நீ வெகுநாள் ஜீவித்திருப்பாயென்று உனக்கு பட்டயசாசனம் எழுதிக்கொடுத்திருக்கிறவர் எவர்? ''காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்'' என்றபடி சமயம்வந்தபோதெல்லாம் தருமகாரியத்தை புத்திசாலியானவன் செய்யவேண்டாமா? ''மிருத்யுவானவன் கொறவளையில் உட்கார்ந்துகொண்டிருக்கிறான்'' என்றுகருதி க்ஷணந்தோறும் மனிதன் தருமத்தைச் செய்யவேண்டும், என்ற தருமசாஸ்திரவாக்கியம் உனக்கு மறந்துபோய் விட்டதா? மேலும் யோசித்துப்பார் பிள்ளையில்லாதவனுக்கு சுவர்க்கம் முதலான நல்ல உலகங்களுக்குப்போக அதிகாரங்கிடையாதென்று உனக்குத்தெரியாதா? ஆகையால் விவாகஞ்செய்துகொள்ளாமல் நீ எப்படி இருக்கக்கூடும்? மேலும் ''வலுவிலேவந்த சீதேவியைக் காலாலுதைக்கலாகாது'' என்கிற பழமொழியை சாதாரணமான மனிதன்கூட அறிந்திருப்பானே; அந்தப்பழமொழி உனக்குத் தெரியாமலிருக்கிறது ஆச்சரியந்தான். ஆகையால் நான் சொன்னதைத் தட்டாமல் உன்மேல் பிரியமுள்ள சாவித்திரியை மணஞ்செய்துகொண்டு தரும காரியங்களைச் செய்துகொண்டுவருவது உனக்குநலம். என்வார்த்தையைத் தட்டாதே'' என்று தருமம் போதித்ததைக் கேட்டு சத்தியவானும் ''கரைத்தால் கல்லுங் கரையும்'' என்கிறபடி மனமிளகி மணஞ் செய்துகொள்ள சம்மதித்தான்.

என். சாமிநாத சாஸ்திரியார்.

(இன்னும் வரும்).

ஓர் தனி மொழி.

சிந்துநதிதீரத்தில் ஓர் பட்டணத்தில் சுந்தரன் என்பவன் ஒருவன் இருந்தான். இவன் சாதாரணமான கைத்தொழில்புரிந்து ஜீவனஞ்செய்யும் ஒருவமிசத்தில் பிறந்தவன். ஆயினும் குழந்தைப் பருவத்திலேயே சிறிது புத்திபுள்ளவனுயிருந்தான். இவன்மேல் அவ்வூராருக்கு யாதோ அன்பு விழுந்தமையால், இவனுக்குக் கல்வி சிறிது கற்பித்து ஒரு சிறு உத்யோகம் சம்பாதித்துக் கொடுத்தார்கள். அவ்வூரினருகாமையில் ஒரு குக்கிராமத்திலுள்ள அவன் பந்துக்களில் ஒருவர் குமாரத்தியை மணஞ்செய்துவைத்தார்கள். இவள் பெயர் சுகுணவல்லி. பெயருக்கொப்பான நற்குணமுடையவள். சாந்தமே உருவுகொண்டவள். பெரியோர்க்கு வணக்கமுடையவள். சிறியோரிடத்து மிக்க அன்புடையவள். மிக்க செல்வவந்தனொருவன் ஏகபுத்திரி.

இவள் கற்பின்வழியின் மாருது வாழுங்காலத்தில், புத்திரப்பேறு இல்லாதிருந்தது. அதற்காக பலவித கர்மசாந்திகள் செய்தாள், விரதங்கள் கைக்கொண்டாள். கோயில்களுக்கு தீபங்கள் வைத்தாள். சநீஸ்வரன்கோயில் சுற்றினள். பலவருஷங்கள் சென்று இம்மாதரசி கருப்பங்கொண்டனள், வேண்டிய உபசாந்திபெல்லாம் செய்யப்பெற்ருள். ஐயிறு திங்களும் சென்றது. கண்மணிபோலும் இரண்டு பெண்மணிகளைப் பெற்ருள். முதற்பிறந்த பெண்ணுக்கு பங்கஜம் என்று பெயர். இரண்டாவது பிறந்தபெண்ணுக்கு சண்பகம் என்று பெயர். இருவரும் மிகவும் செல்வாக்குடன் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாகவளர்ந்துவந்தார்கள். தாயானவள் புத்திசாலியானதால், பெண்களுக்குக் கல்விகற்பிக்க எண்ணம். சுந்தரன் அவ்வளவு சிறந்தவமிசத்தில் பிறக்காதவனுகையால், பெண்களுக்குக் கல்வி கற்பிக்கக்கூடாதென்று மறுத்தான். ஆயினும், சுகுணவல்லி, சிறிதுகல்வியுடைய மாதானபடியால், தனக்குத் தெரிந்த கல்வியைக் கற்பித்துவந்தாள். இரு குமாரத்திகளிலும், மூத்தவள் மதியுடையபெண். கல்வியில் விருப்பங்கொண்டவள், யுக்தியுடையவள், அதிகுணவதி. இளையவள் மூத்தவளைவிட சிறிது சௌந்தர்யமுடையவள். ஆயினும், அடக்கம் முதலிய பெருந்தன்மை யடைந்தவளல்ல. மனத்திடமில்லாதவள். பெண்களிருவருக்கும் வயதுவந்தது.

பெண்களுக்கு தக்க கணவனைத்தேடல் கடினமன்ருே? முன்னிலும் பெருங்கவலை யுண்டாய்விட்டது, பலவிதமாக மனங்குழம்ப ஆரம்பித்தது.

சிலர் அழகுடைய மருகரைத் தேடவேண்டுமென்றார். சிலர் செல்வவந்தர்கள்தான் மருகராதல் வேண்டுமென்றார். சிலர் சாதியைப்பற்றி கவனிக்க வேண்டுமென்றார். பலர் பலவிதம் ஆலோசனைசொல்ல ஆரம்பித்தார்கள். பங்கஜமோ ஒருறுதிகொண்டிருந்தனள். அதாவது: அழகில்லாவிடினும், பொருளில்லாதவனாயினும், நல்ல குணமில்லாவிடினும், கல்விதேர்ச்சியுடையவனையே வரனாகக்கொள்ள விரும்பினவள். கல்வியொன்றிருந்தால், குணம் நல்லதாயிராதவனையும், நாம்நடந்துகொள்ளும் பக்குவத்தில், நம்வழிக்குக் கொண்டுவரலாமென்னும் முழு நம்பிக்கையுடையவள். தன் எண்ணத்திற்கு மாறாகாத கணவனே தனக்கு நாயகனாக வரவேண்டுமென்று சதா கடவுளைத் தியானித்து வந்தாள். தன் வேண்டுகோளுக்கேற்ற கணவன் அமைந்தான். இவன்பெயர் சாந்தசீலன்.

சாந்தசீலன் அதிக செல்வத்திலே பிறந்து வறுமையடைந்தவன். கல்வியில் சிறிது தேர்ச்சியுள்ளவன். அழகிலாத குரூபியுமல்லன். இவன் மணம்புரிந்தபின், தான் பின்னும் அதிக கல்விகற்க விருப்புடையவனாகி துக்கப்பட்டுக்கொண்டிருந்தான். இவன் துக்கத்தைக் குறிப்பால்கண்டாள் மனைவி. "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி" யல்லவா? கொண்டான் கழுத்தரியுங் காமாட்டியும் உலகிலுண்டேனும், இவளும் கல்வி விருப்பமுள்ளவளானபடியால், தன்கணவன் இஷ்டத்தைப் பூர்த்திசெய்யவேண்டுமென்னும் எண்ணம் உண்டானது. தன் தாய்தந்தையரைத் தனக்கு இதுவிஷயமாக ஒத்தாசை செய்யும்படிகேட்க மனமில்லாதவளாயிருந்தாள். கடைசியாக, தன் நகைகளைவிற்று அதனால் வந்தபொருளைக்கொண்டு தன் கணவனுக்குப் புத்தகம் முதலியவைவாங்கி, தான்கொண்ட இஷ்டப்படி, படிக்கத் தூண்டினாள். பணத்தையே பெரிதாகநோக்கிப் புருஷனைச் சிறப்பியாத மனைவியர் எத்தனைகோடி! இப்பேர்ப்பட்ட அன்புள்ள மனைவியை நோக்குந்தோறும், எண்ணுந்தோறும், அக்கணவனுக்கு எவ்வளவு அன்பு மேலோங்கும்! தன்மனங்கோணாது நடப்பதோடு தன்குறிப்பறிந்து நடக்கும் மனைவியை தன் பெண்போல் அருமையாய்ப் பாவித்துவந்தான். தன்னிச்சைபோல் கல்வியில் மனதைச் செலுத்திவந்தான். மனைவியின் நகைகளும் போய் தானும் வறுமையுற்றதால், சிறிது கஷ்டகாலமாயிருந்தது. ஆயினும் பங்கஜத்தின் அன்பும் குளிர்ந்த முகமும் அவன் கஷ்டங்களைத் துடைத்துவந்தது.

இவர்களிப்படியிருக்க, சண்பகத்திற்கு மணம்புரிவிக்க யோசிக்கலானார்கள். தந்தை மருகன் கற்றவனாயிருத்தல் வேண்டுமென்றும், தாய் மருகன் செல்வவந்தனாயிருத்தல் வேண்டும் என்றும், அபேக்ஷிப்பது

இயல்பேனும், சண்பகம் தாய்தந்தைகள் வேறான எண்ண மடைந்தார்கள். சுந்தரனுக்கு செல்வமுடையோனுக்குக் கொடுக்கமனம்; ஆனால், சுகுணவல்லிக்குத் தன்மகளைக் கல்வியுடையவனுக்கே கொடுக்கமனம். சுந்தரனெண்ணமாவது, முன் பங்கஜத்தை கல்வியுடையவனுக்குக் கொடுத்து என்னபலனை யடைந்தாள்? தன் நகை முதலியவைகளை யிழந்தாளென்பதே. சுகுணவல்லிக்குக் கல்வி எப்பொழுதும் சுகத்தையே யளிக்குமென்பதுஎண்ணம்.

பலவாறு இருவரும் தருக்கஞ் செய்துவந்தார்கள். சுகுணவல்லி தன் கணவன் சொல்லை மறுத்துரைக்க மனமில்லாதவளா யிருந்தாள். ஆனபடியால், தன்னாலியன்றமட்டும் குறிப்பாய் தன்னிச்சையையும் அப்படியே தன்னிச்சைபோல் கல்விவந்தனுக்கே கொடுப்பதால் உண்டாகும் பல நன்மைகளையும் எடுத்துரைத்து வந்தாளே யன்றி, கணவன் இஷ்டத்தை மறுத்துரைக்க மனந்துணிந்திலள்.

இவ்விதஞ் சில நாட்சென்றன. உலகில் பெண்களுக்கு யாதொரு நற்குணமுமில்லாவிடினும் அழகிருந்தால், பலர்க்கும் நாட்டம் விழல் இயல்பன்றோ? குணமில்லாத மனைவி கழுத்திற்குக் கயறு என்பது எப்பொழுது தெரியும்? அறுபதும் முப்பதும் ஆக தொண்ணூறு நாளும் சென்றாலன்றோ தெரியும். சண்பகமும், அதிரூபலாவண்யமுடையவளென்றும் அதனால், தன்னினும் அழகுடையார் யாருமில்லை யென்றும் பெரு மதிப்புகொண்டு, தற்புகழ் என்னும் மரம் அவள் மனதில் தழைக்க ஆரம்பித்தது; யாரையும் அவமதித்து கர்வத்தைப் போஷித்து வந்தாள். இப்பருவத்தில் இத்தீக்குணம் உதித்தால் பின் எத்தன்மையி லிருப்பா ளென்பதை குறிப்பா யுணரலாம்! தகப்பனும் பெண்ணின் இச்சைபோல் விட்டுவந்தார். தாய் தகப்பன்மார் மக்களிடத்திலும், புருஷன் மனைவி யிடத்தும் அன்பு பாராட்டவேண்டியது நற்குணந்தான்; ஆனால், கண்டிக்கவேண்டிய விடத்தில் கண்டிப்பது அருமை குறைவாகாது. சண்பகம் தன் தகப்பனை நோக்கி, 'தந்தையே, எனக்கு மணஞ் செய்யுமுன்னே, நம்முடைய பந்துக்களில் யார் யார் அதிக செல்வமுடையவர்களென்று தெரிந்துகொள்ளவேண்டும்' என்றாள். உடனே மகள்வாக்கை தெய்வ ஆக்கினையாக் கொண்டு, தன் அம்மான் மாமியாருக்குப் பாட்டனாரை யழைத்துவரும்படி ஆளனுப்பினார். பந்துக்க ளின்னாரென்பதும், அவரவர்களுடைய அந்தஸ்து இன்னதென்றும் உணர்ந்துள்ளவராகிய அப்பெரியவர் வந்தார். சண்பகம் ஒரு நாற்காலியிலும் பெரியவர் ஒரு நாற்காலியிலும், தான் ஒரு ஈசிசேரிலும் உட்கார்ந்தார்கள். சுகுணவல்லி, வந்த பெரியவருடைய ஆசிர்வாதம்

பெற்று, ஒரு புறமாக வணக்கத்துடனும் குளிர்ந்த முகத்துடனும் நின்று கொண்டிருந்தாள். பெரியவரும் தன் பந்துக்களை தாராதரத்துடன் விவரமாய்ச் சொல்லினர். கல்வி தேர்ச்சியுள்ளவர்கள் இன்னின்னர் என்றும், குணசாலிகள் இன்னவரென்றும் செல்வம் நிறைந்தவர்களின்னவர்களென்றும் சொன்னர். பெண்ணுக்கும் தகப்பனுக்கும், சலசலோசனன் என்னும் சிறுவனின் பணத்தின்மேல் மனஞ்சாய்ந்தது. உடனே தக்க ஏற்பாடுகளெல்லாம் செய்து சண்பகத்தைச் சலச லோசனுக்கே கொடுக்க தீர்மானித்தார்கள். சண்பகத்தின் அழகைக் கண்ட சலசலோசனனும் இசைந்தான். புரோகித ராமையரும் நாள் குறித்தார்.

மணமுடிந்தது. வேடிக்கை விநோதம் பல நடந்தன. செலவும் கணக்கில்லாமலும் மிதம் மிஞ்சியும் ஆனது. குழந்தை சண்பகமும் தன் கணவன் மாளிகை யடைந்தாள். இருவரும் ஒரு வருஷ காலம் மிகவும் சந்தோஷத்துடனிருந்தார்கள். ஒருநாள் இருவரும் நிலைக்கண்ணாடியின் முன் நின்றுகொண்டிருக்கும்போது, சண்பகம் கருநிறமுடைய தன் கணவனை நோக்கி, ‘நான் எவ்வளவு சிகப்பா யிருக்கிறேன், நீங்கள் இவ்வளவு கறுப்பா யிருக்கிறீர்களே’ யென்றாள். இப்படி விளையாட்டாகவும் கர்வத்துடனும் ஆரம்பித்த வாக்குவாதம் மேலிட்டு, இருவருக்கும் சிறிது மனஸ்தாபம் உண்டாய்விட்டது. உடனே, எவ்வளவு சீக்கிரத்தில் ஆசையுண்டாச்சுதோ அவ்வளவு சீக்கிரமே ஆசையும் நீங்கியது. சலசலோசனனுக்கு மதுபான முதலிய துன்மார்க்க மெல்லாம் அதிகரித்துவிட்டது. சண்பகமும் பணத்தின் பொருட்டு கணவனிடத்தில் அன்பு வைத்தவளாதலால் கணவன் பொருள் முழுதும் அழியு முன்னே, தன் ஆசை நீங்கி தாய்வீடு வந்து சேர்ந்தாள். தாயாகிய சுகுணவல்லியும் தமக்கையாகிய பங்கஜமும் எவ்வளவு சொல்லியும் கணவனிடம் வாழ மறுத்தாள். சுகுணவல்லிக்கு கலக்கமுண்டானது. அன்றிரவு தூக்கம் வரவில்லை. நடுராத்திரியில், அடியில் வரும் தனிமொழி கூறிக்கொண்டு உலவினள்.

“துன்ப மென்பது இல்லை யென்றிருந்த எனக்கு பெருந் துன்பம் நேர்ந்ததே! ஈசனே—என்ன செய்வேன். கல்வியுடைய வொருவனுக்கு நேர்ந்திருந்தால், சண்பகம் என்ன அந்தஸ்திலிருப்பாள்? காரணமில்லாமலே அடித்தாரா. பங்கஜத்தின் அடக்கத்தில் நூறிலொரு கூறு சண்பகத்திற்கு இருந்தால், இத்துன்பம் எனக்கு வந்தே யிராது. எதில்லாவிடினும் புத்தியிருக்கவேண்டும். பணம் பெரிதா. கல்வியின் பயனை எவ்வளவு சொல்லியும் கேளாமற்போனரே. யாரை நோவது. கடவுள் இவை

களை யெல்லாம் கண்ணுற்காணவும் காதால் கேட்கவுமா என்னைப்படைத்தார். பங்கஜத்தை உலகம் புகழ்வதைப்பற்றி சந்தோஷப்பட்டேனே. புருஷனும் மனைவியும் அன்புடன் வாழுவதைக்கண்டு கெர்வங்கொண்டிருக்கிறேனே. பங்கஜத்தின் பொறுமையே பொறுமை. நகைகளை யெல்லாம் கணவனுக்கு எவ்வளவு அன்புடன் கொடுத்தாள். அதனால்தான் இப்பொழுது இவ்வளவு சிறப்பாக வாழ்வது. அவரும் கல்வியுடையவராதலால் தான் சண்டிக்கவேண்டிய சமயத்தில் கண்டித்தாலும் இவ்வளவு பெருமையுடன் வாழ்வது. கல்வியின்முன் பணம் எவ்வளவு? சண்பகமும் அதே வயிற்றில்தானே பிறந்தாள். கடவுள் ஒருவரை எல்லாவிதத்திலும் இன்பம் அனுபவிக்கவைத்தல் கூடாதோ. ஒருபெண்ணால் சுகப்படவும், ஒருபெண்ணால் துன்பப்படவும் நேர்ந்ததே. நமக்கு ஒரேபெண்ணாய் இருக்கலாகாதா. இப்பூமியில் இவ்வளவு துன்பப்பட எப்படி சண்பகம் பிறக்காதிருப்பாள். பணத்தையே பெரிதாக மதித்த நம்கணவர்மனம் வேறுபட்டிருந்தால், குறையுண்டாயிராது. எல்லாம் தெய்வசங்கல்பம். சண்பகம், உனக்கழகிருந் தென்னபலன். பங்கஜம் சொல்லையும் கேட்கமாட்டேனென்கிறாயே. சுயபுத்தி யில்லாவிடினும் சொற்புத்தி கேளாரா? எதுவுமில்லையே. உன் அழகென்னபலனானது. உன்னை அடித்தாரா. இதைவிட யான் என்ன அனுபவிக்கவேண்டும். மாதாசெய்தது மக்களைச்சேரும் என்கிறார்களே. நான் என்ன பெரும்பாதகம் முன்செய்தேனோ. பெண்கிளியை ஆண்கிளியினின்றும் பிடித்து கூட்டி லடைத்துவைத்தேன். என்போல் துன்பப்படுவோர் உலகிலுண்டோ?"

இவ்வாறு சிந்தித்துக்கொண்டிருக்கும்போது கணவன் அழைக்கும் குறல்கேட்டு சென்றாள்.

பொ. மங்கையர்க் கரசியம்மாள்.

LADY JANE GRAY.

லேடி ஜேன் கிரே.

நன்றி யறிவற்ற அம்மந்திரிகள் சைன்ய மனுப்பாம லிருந்ததோடு கூட ஜேனைவிட்டு மேரியே எஜமான துரோகிகளென்றும் பெயரை முழுவதும் ஸ்தாபித்தார்கள். இந்த ஸ்திதியில் மேரியோடு போர் புரிவது அநுசிதமென்று நிச்சயித்து நார்த்தம்பர்லண்ட் சமீபத்தி லிருந்த கேம்ப்ரி

ட்ஜ் என்னும் நகரத்துக்குச் சென்று மானத்திலும் தன்னுயிரையே பெரிதாக நினைத்து, "மேரியே ராணியாகி சிரஞ்சீவியாக விருக்கக் கடவாள்" என்று உரக்கக் கூவினான். இவனைப்போன்ற பாவிகளை யிவ்வுலகில் காண்பது மிக அரிது. துரியோதனாதிகளுக்குப் பிராண சிநேகிதன்போலிருந்து சூதென்னும் விஷத்தை யமிர்தம்போல அவர்களுக்குக் காட்டி, "உன்னாலேயல்லவோ நான் உலகத்தை யாள்வது சகுனி மாமா" என்று துரியோதனன் சொல்லும்படி மாயவலையில் அவர்களைச் சிக்கி, கடைசியாக குருக்ஷேத்திரத்தில் கண்ணபிரானுடைய பூரணானுக் கிரகத்தினால் வீராவேசங்கொண்ட பாண்டவர்களின் கையினால் திருதராஷ்டிர வம்ஸம் அடியோடற்றுப் போகும்படி மோசஞ்செய்த சகுனி இங்கிலாந்திலும் ஒருவாறு அவதரித்து நார்தம் பர்லண்டென்னும் பேரை வகித்தானோ வென்றெண்ணும்படியாக விருந்தது. ஆனாலிவன் செய்த அக்கிரமம் தெய்வத்துக்கே பொறுக்காமல் போனபடியால் மேரியைச் சேர்ந்தவர்கள் உடனே இவனைப் பிடித்துச் சிறையிலடைத்தார்கள். இதை யெல்லாம் கேட்டவுடன் நாரீரத்தினமான ஜேன் இந்த மட்டிலாவது நம்மைப் பிடித்த சனி விலகிற்றென்று மனம் களித்து ராஜ்ய பாரத்தை மேரியினிடம் ஒப்புவிக்கச் சித்தமாக விருந்தாள். ஆனால் மேரியின் மந்திரிகள் ஜேனைச் சும்மா விடுவது அபாயமென்று பயந்து அவளையும் அவள் கணவன், தாய், தந்தை முதலான எல்லாரையும் பிடித்துச் சிறையி லடைத்தார்கள். ஆனால் "பட்ட காலிலேயே படும் கெட்ட குடியே கெடும்" என்ற பழமொழிப்படி ஜேனுடைய துயரங்கள் இதோடு நிற்கவில்லை. ஏனெனில் சிறையிலிருந்தாலும் தன்னுடைய நாயகனோடு கூடியிருந்தால், அவனைப் பார்த்தாவது தன் துயரம் சிறிது தீரும். அந்த அல்ப சந்துஷ்டிகூட அவளுக்குத் தகாதென்று நினைத்து அவளைத் தனியாக ஒரு இடத்தில் அடைத்துவிட்டார்கள். ஆயினும் தன் மனக்கிலேசத்தைச் சிறிதும் வெளியிற் காட்டாமல் பூதேவியைப் போன்ற பொறுமையுள்ளவளா யிருந்தாள். கடைசியாக நவம்பர்-மீ 13-உ ஜேனையும் அவள் கணவனையும் விசாரிக்கக் கொண்டுவந்தார்கள். இவர்கள் கட்சியை எடுத்துப்பேச ஒருவரும் இல்லை. அப்படி யிருந்தாலும்தான் என்ன பிரயோசனம்? சற்றுநேரம் விசாரித்து நியாயத்தைக் கண்டுபிடிப்பதுபோல் பாசாங்குபண்ணி அவர்களிருவரையும் தூக்குப் போட்டு விடும்படி தீர்மானித்தார்கள். இந்த சமயத்தில் சிறையிலடைத்த நாள் முதல் காணாத தன் கணவனை சற்றுப் பார்த்து மனம் கலங்கி, எவ்வளவு பொறுமையுள்ளவளாயினும் கேவலம் ஸ்திரீ ஜாதியானதால் தன் துயரத்தை யடக்க முடியாமல் இவ்வாறு புலம்பத் தொடங்கினாள். "என்னன்பிற்குரிய பிராணநாதா இந்த கதியை யடையவா நாமிருவரும் மணம் புரிந்தோம். இவ்வுலகில் நாம் அனுபவித்த சுகம் கேவலம் ஒரு சொப்பனம்

போல் மறந்துவிட்டதே. ராஜ்யத்தை ஒப்புக்கொள்வதில் சிறிதேனும் எனக்கு இஷ்டமில்லை யென்பது சகலரு மறிந்த விஷயம். ஆகையா லிப்போது அது என்னிடமிருந்து நீங்கினது எனக்கு மிக்க சந்தோஷமே. ஆயினும் நம்மைக் கொலை செய்யும்படி விதிப்பானேன்? அப்படிப்பட்ட தீங்கு மேரிக்கு நான் ஒன்றும் செய்யவில்லையே. ஆனால் பிறகு அவளுக்கு நான் போட்டியாக கிளம்புவேனோ வென்கிற அச்சத்தினால் என்னைக் கொலை செய்யும்படி விதித்திருக்கலாம். தங்களையும் குற்றவாளியாகச் சேர்க்க ஒரு காரணமுமில்லையே? துர்ப்பாக்கியையான என்னை மணம் புரிந்ததன்றி வேறு ஒரு பிசகும் தாங்கள் செய்யவில்லையே? பாவியான என்னை மனைவியாகக்கொண்டு ஒரு பலனையும் காணுமற்போனபோதிலும் உயிரையுங்கூட இழக்கும்படியான கதி தங்களுக்கு வரவேண்டுமா? அனாத ரக்ஷகரான தெய்வமே நிரபராதியான டட்லியை மாத்திரமாவது கிருபை கூர்ந்து காப்பாற்றலாகாதா" என்று புலம்ப டட்லி ஆறுய்ப் பெருகும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "லலனாமணியே நீ சொல்வது சரியல்ல. பாபம் மிகுந்த இவ்வுலகில் நாமிருந்த காலம் கொஞ்சமாகிலும் இருவரும் கூடிமிறந்தால் பரலோகத்திலாவது சேர்ந்து நெடுங்காலம் இருக்கலாமே. ஆகையால் நீ யிறந்து நான் மட்டும் பிழைத்திருந்தால் நம்முடைய துயரம் விருத்தியாகுமே யொழிய வேறில்லை. ஆகையால் கூடி யிறப்பதே சுகம்; என் கண்மணி இனி இவ்வுலகில் நாம் பேசப்போகிறதில்லை என்று அவளைச் சாந்தப்படுத்திக்கொண்டிருக்கையில்" யமகிங்கரர்கள் போன்ற சேவகர்கள் அவர்களை பலாத்காரமாய்க் கொண்டுபோய் மறுபடி தனித்தனியே அடைத்துவைத்தார்கள். இப்படி சிலநாள் சென்றது. கொலை செய்வதற்காக குறித்த தினமான 1554-ஆ பிப்ரவரி-மீ 12-உ வந்தது. இவ்வளவு நாளாய் மிக்க ஆவலுடன் காத்துக்கொண்டிருந்த கொலையாளிகள் வந்து அவர்களை யிட்டுக்கொண்டுபோய் கொலை பூமியில் நிறுத்தவே அவர்களிருவரும் சிறிதேனும் மனம் பதறாமல் மிக்க சாந்தமாய் கொலை மரத்திலேறி தெய்வத்தை தியானித்துக்கொண்டு உயிரை இழந்தார்கள். பெண்களே ராஜ குலத்தில் பிறந்து கொஞ்சகாலம் ராஜ்யபாரத்தையும் வகித்து தன் குலப்பெருமை வந்த காலத்தில் அதைக் கொஞ்சமும் பாராட்டாமலும், கஷ்டகாலம் வந்தபொழுது எவ்வளவோ பொறுமையாய் அதைச்சகித்த ஜேனுடைய சரித்திரத்தினால் நீங்களும் அவளைப்போலவே நடக்கக் கோருவீர்களாக.

பி. துருசாமி அய்யர் பி. ஏ.

முற்றிற்று.

ஈரோடு கெவர்ன்மெண்டு பெண்பாடசாலையின் வருஷோற்சவம்.

ஜூலைமீ 4௳யில் ஈரோடு கெவர்ன்மெண்டு பெண்பாடசாலையின் வருஷோற்சவம் நடந்தது. அப்பொழுது மிஸ். ஆர்னல்ட் அம்மாள் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்தார். சப் அவிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரவர்கள் இப்பாடசாலையிலுள்ள அநேக பாலிகைகள் சென்றபரீக்ஷையில் தேறினார்களென்றும் இது ஒரு பெரிய கீர்த்தியென்றும் சொல்லி ரிபோர்ட்டை வாசித்தனர். பின்பு சில பெண்கள் கிண்டர்கார்டன் பாட்டுகளையும், கும்மி பாடல்களையும் பாடியபின்பு கோலாட்டமும் அடித்தார்கள். இன்னும் 5 பெண்கள் சேர்ந்து தாயாரிடத்தில் தேனுபரணியின் நடவடிக்கை என்ற சம்வாதத்தை வெகு வேடிக்கையாகவும் யாவரும் சந்தோஷிக்கத்தக்கதாயும் நடத்தினார்களாம்.

பரீக்ஷையில் தேறிய பெண்களுக்கு தகுந்த பரிசுகளளிக்கப்பட்டவுடன் மிஸ். ஆர்னல்ட் பெண்களுக்கு கல்வி அவசியம் வேண்டியதென்றும், இந்த உற்சவகாலத்தில் ஒரு இந்துஸ்திரீகூட இங்குவராதது தனக்கு விசனமாயிருக்கிறதென்றும் சொன்னார். பின்பு பெண்கள் விக்டோரியா மகாராணியாரை வாழ்த்தியபின் சபை கலைந்தது.

பாகசாஸ்திரம்

வெண்பொங்கல்:—பச்சரிசி 1படி,பயத்தம் பருப்பு 3ஆழாக்கு,நெய் 10பலம்,இஞ்சி 1 தம்பிடி, முளகு சீரகம் 2 தம்பிடி, உப்பு அரை ஆழாக்கு, பெருங்காயம் 2 தம்பிடி, முந்திரிபருப்பு 5 பலம். பச்சை அரிசியையும் பயத்தம்பருப்பையும் நன்றாககழிவி கழனீர்போக்கி உலையில்யிட்டு கிளரிக்கொண்டே யிருந்து அரைப்பதம் வெந்தபிறகு மிளகு, சீரகம், உப்பு இவைகளைப் பொடிசெய்து இதில் கலக்கவேண்டும். இஞ்சியை பொடி பொடியாய் நறுக்கி இதில்சேர்க்கவேண்டும். பெருங்காயத்தில் கொஞ்சம் ஜலம்விட்டு நன்றாக ஊர்ந்தபின் இதில் கலக்கவேண்டும். 5 பலம் நெய்யையும் இதில் சேர்க்கவேண்டும். இவைகளெல்லாம் வெந்தபின் தீயை யடக்கி அரைநாழிபொருத்து யிறக்கவேண்டும். முந்திரிபருப்பை பக்குவமாக நெய்விட்டு வருத்து பொங்கலில் இதையும் மீதியுள்ள 5 பலம் நெய்யையும் கலக்கவேண்டும். பின்பு புசிக்கலாம்.

NEWS & NOTES.

உலகத்தில் கல்வியானது தாயைப்போல் ரக்ஷிக்கிறது. தகப்பன்போல் ஹிதத்தைச் சொல்லுகிறது கீர்த்தியை எல்லாவிடங்களிலும் பிரசித்தப்படுத்துகிறது. பணத்தைத் தருகிறதுமல்லாமல் சந்தோஷப்படுத்துகிறது. ஆகையால் கற்பகக்கொடி போன்ற வித்தையானது ஸ்திரீகளுக்கும் புருடர்களுக்கும் சகலத்தையும் தருகிறது.

ஜர்மனி ராஜ்யத்துக்குச் சக்ரவர்த்தியாகிய வில்லியம், மகாராணியவர்களை நவம்பர்மீ 15௳ லண்டனில்போய் பார்ப்பதாக தெரியவருகிறது. ஜர்மனி சக்கிரவர்த்தியினுடைய தாயார் மகாராணியவர்களின் முதல்புத்திரி. நமது மகாராணியார் சக்கிரவர்த்திக்கு பாட்டியாராகவேண்டும். பேரன் பாட்டியார் வீட்டிற்குச்சென்று அவரைப்பார்ப்பதும் க்ஷேமத்தை விசாரிப்பதும், பாட்டியார் பேரனை அன்பாய் பாராட்டி நடத்துவதும் உறவின் முறையேயாம்.